இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in  murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 350 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 14 – புதன்கிழமை 30 ஜூலை 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 350 : Thiruvalluvar Year - 2056 - Aadi 14 - Wednesday 30 July 2025 - Madurai 16 Pages ₹ 5.00

## மருத்துவக் கல்வியில் ஓ.பி.சி. 27% இடஒதுக்கீட்டை வென்று காட்டிய நாள்!

# சமூகநீதிக்கான அரசியலை தொடர்ந்து மேற்கொள்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!



**சென்னை, ஜூலை 30 -**

**“மருத்துவக் கல்வியில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் 27 சதவீத இடஒதுக்கீட்டை வென்று காட்டிய நாள் ஜூலை 29. சூழ்ச்சி அரசியலை முறியடித்து, சமூக நீதிக்கான அரசியலை தொடர்ந்து மேற்கொள்வோம்” என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உறுதியுடன் தெரிவித்துள்ளார்.**

ஒன்றிய அரசுப் பணிகளிலும் கல்வி நிலையங்களிலும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்துக்கான இட ஒதுக்கீட்டை 50 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது. மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகள் அமலுக்கு வந்து கால் நூற்றாண்டு ஆனபிறகும் முழுமையாகச் செயல் வடிவம் பெறவில்லை. இந்த நிலையில் 29.07.2001 அன்று ஒன்றிய அரசு 27 சதவிகித இடஒதுக்கீடு வழங்குவது என்று முடிவு செய்து அறிவித்தது. சமூக நீதி வரலாற்றில் முக்கிய நகர்வாக அது உள்ளது.

மாநிலங்கள் அகில இந்தியத் தொகுப்பிற்கு வழங்கும், மத்தியத் தொகுப்பிற்கு அளிக்கும் 15 விழுக்காடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவ இளங்கலை இடங்களிலும், 50 விழுக்காடு முதுநிலை மருத்துவ இடங்களிலும் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் ஒன்றிய அரசின் முடிவு தமிழ்நாட்டுக்குக் கிடைத்த வெற்றியாகும். குறிப்பாக இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சமூக நீதிப் போராட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாக அமைந்திருந்தது.

இந்தியாவின் சமூகநீதி வரலாற்றில் மறக்க முடியாத நாள்.. ஆம் மருத்துவக் கல்வியில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் 27 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்த நன்னாள். 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தொடங்கிய போராட்டம், 2021ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் தேதி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் வழி உறுதி செய்யப்பட்டது. இதன் மூலம் 2021 முதல் 2025ம் ஆண்டு வரை நான்கு கல்வியாண்டுகளில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட, இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உரிமை, உறுதி செய்யப்பட்ட நாளாகும்! ஜூலை 29.

2021 ஜூலை 29 அகில இந்திய மருத்துவ மாணவர் சேர்க்கையில் ஓ.பி.சி. 27% இட ஒதுக்கீடு வென்று காட்டிய சமூகநீதி நன்னாள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி. வில்சன் அவர்களின் பதிவை மேற்கோள்காட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**20,088 இடங்கள் = பல குடும்பங்களின் பல தலைமுறைக் கனவு!**

**சதிக்குக் கால் முளைத்துச் சாதியாகி உழைக்கும் மக்களை ஒடுக்கினாலும், விதி வலியது இதுதான் நம் தலையில் எழுதியது எனச் சுருண்டுவிடாமல், போராடி பெறும் உரிமைகளால் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் நமக்கான இடங்களை உறுதிசெய்கிறோம்!**

**சமூகநீதிக்கான இந்த அரசியலையும் போராட்டத்தையும் நாம் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். நம் விரல்களைக் கொண்டே நம் கண்களைக் குத்தும் வித்தையறிந்தவர்கள் செய்யும் சூழ்ச்சி அரசியலை முறியடிக்க, இந்நாளின் வரலாற்று முக்கியத்துவத்தை உரக்கச் சொல்வோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

**மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பதிவு!**

நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி. வில்சன் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**சமூகநீதி வரலாற்றின் சாதனை மைல்கல்!**

2021 ஜூலை 29 அகில இந்திய மருத்துவ மாணவர் சேர்க்கையில் ஓபிசி 27% இட ஒதுக்கீடு வென்று காட்டிய சமூகநீதி நன்னாள்!

சமத்துவ நாயகர், சமூகநீதிக் காவலர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் காட்டிய வழியில், OBC மாணவர் நலனில் கொண்ட உறுதியில் சட்டப் போராட்டத்தில் வென்று காட்டினோம்!

இந்திய அளவில் நிலைநாட்டப்பட்ட OBC மருத்துவ மாணவர்களின் கல்வி உரிமை !

14 வருடங்களாக மருத்துவப் படிப்புகளில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, அவர்களின் உரிமைகளை மீட்டெடுத்ததன் மூலம், ஆண்டுதோறும் இந்திய அளவில் மருத்துவப் படிப்புகளில் 4,022 இடங்களும், பல் மருத்துவ படிப்புகளில் 1000 இடங்களும் கிடைக்கப் பெற்ற நிலையில், கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தமாக 20,088 மருத்துவ இடங்களை ஓ.பி.சி. வகுப்பினைச் சார்ந்த மாணவர்கள் பெற்று பயனடைந்துள்ளனர்.

கழகத்தலைவர் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பணி மகத்தானது மட்டுமல்ல... வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது.

சாதனைப் பயணம் தொடரட்டும்! சமூகநீதி தீர்ப்பு சிறக்கட்டும்!

இவ்வாறு அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (29.7.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டைச் சேர்ந்த கணினி அறிவியல் துறையிலுள்ள இறுதி ஆண்டு பயிலும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான கேம் டெவலப்பர், ஆர்டிஸ்ட் மற்றும் புரோகிராமர் திறன் பயிற்சி திட்டத்திற்காக உலகளாவிய நிறுவனமான கூகுள் மற்றும் யுனிட்டி நிறுவனத்தினருக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்திற்கும் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் கூகிள் பிளே பார்ட்னெர்ஷிப்ஸ் APAC பார்ட்னர் மேனேஜ்மென்ட் & ஈகோஸிஸ்டெம் பார்ட்னெர்ஷிப்ஸ் டைரக்டர் குணால்சோனி, கூகுள் இந்தியா பிளாட்பார்ம்ஸ் & டிவைஸ், அரசாங்க விவகாரங்கள் மற்றும் பொதுக் கொள்கை, பாலிசி ஹெட் திருமதி அதிதி சதுர்வேதி, சிறப்புத்திட்ட செயலாக்கத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் கிராந்தி குமார் பாடி ஆகியோர் உடனிருந்தனர்.

## ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்! இதுவரை 12.65 லட்சம் மனுக்கள் பெறப்பட்டுள்ளன!

### மகளிர் உரிமைத்தொகை கோரி 5.88 லட்சம் பெண்கள் விண்ணப்பித்துள்ளனர்!

**சென்னை, ஜூலை 30 -**

**‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் மூலம் இதுவரை 12 லட்சத்து 65 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.**

தமிழ்நாடு அரசு துறைகளின் சேவைகளை பொதுமக்களின் வீடுகளுக்கே சென்று வழங்கும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை ஜூலை 15ஆம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதனையடுத்து மாநிலம் முழுவதும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. நவம்பர் மாதம் வரை 10 ஆயிரம் முகாம்கள் நடைபெறவுள்ளன. நகர்புறப் பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் 13 துறைகள் மூலம் 43 சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இதேபோன்று ஊரகப் பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் 15 துறைகள் மூலம் 46 சேவைகள் வழங்கப்படுகின்றன. முகாம்களுக்கு அதிக ஆர்வத்துடன் வருகை தரும் பொதுமக்கள், ரேஷன் அட்டைகளில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் மற்றும் பல்வேறு சான்றிதழ்கள் கோரி மனு அளிக்கின்றனர்.

இந்த மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. முகாம்களில், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் பயன்பெறுவதற்கு பெண்கள் விண்ணப்பித்து வருகின்றனர். ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் முகாம் மூலம் இதுவரை 12 லட்சத்து 65 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டுள்ளன. 5 லட்சத்து 88 ஆயிரம் மனுக்கள் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளன.

### ஆளுநர் ஆர்.என்.ரவி வழக்கின் தீர்ப்பு! குடியரசுத் தலைவர் கேள்வி தொடர்பான வழக்கு!

## ஒன்றிய அரசின் மனு நிலைநிற்குமா? இல்லையா?

### உச்ச நீதிமன்றத்தில் ஆக.19இல் விசாரணை!



*புதுடெல்லி, ஜூலை 30-*

ஆளுநர் வழக்கில் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக, குடியரசுத்தலைவர் மூலம் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை, உச்சநீதிமன்றம் ஆகஸ்ட் 19ம் தேதிக்கு ஒத்திவைத்தது.

குடியரசு தலைவர் கேள்வி தொடர்பான மனுவை கடந்த வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உச்சநீதிமன்றம், ஒன்றிய அரசு, அனைத்து மாநில அரசுகளுக்கும் பதிலளிக்க உத்தரவிட்டது. இதனை அடுத்து, உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகள் சார்பில் பதில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

**தமிழ்நாடு அரசின் பதில் மனு!**

தமிழ்நாடு அரசின் பதில் மனுவில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி வழக்கில் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக குடியரசுத்தலைவர் மூலம் தாக்கல் செய்த மனுவை திருப்பி அனுப்பவேண்டும் என்றும், ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட சட்ட வழிமுறைகளை சீர்குலைக்கும் வகையில் குடியரசுத்தலைவர் மூலம் மனுத்தாக்கல் செய்துள்ளார் என்றும், உச்சநீதிமன்ற தீர்ப்பை மீறும் வகையில் குடியரசுத்தலைவர் மூலம் இந்த கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாடு அரசின் பதில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடியரசு தலைவர் மூலம் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு, ஆளுநருக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கில் வழங்கியுள்ள தீர்ப்பில் விரிவாக பதிலளிக்கப்பட்டுள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இவ்வழக்கு மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில், தலைமை நீதிபதி தலைமையிலான 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வில் மீண்டும் நேற்று விசாரணை நடைபெற்றது. தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் கபில் சிபல், அபிஷேக் சிங்வி, வில்சன் ஆகியோர் ஆஜராகினர்.

இரு தரப்பிலும் வாதிட குறைந்து 8 நாட்கள் தேவை என்று தமிழ்நாடு அரசின் சார்பில் கபில் சிபல் வாதிட்டார். மனு நிலை நிற்பதா இல்லையா என்பதை முதலில் முடிவு செய்ய வேண்டும் என்று கேரள அரசு தரப்பில், கே.கே.வேணுகோபால் கேட்டுக் கொண்டார்.

இதனை அடுத்து, ஒன்றிய அரசின் மனு நிலை நிற்குமா? இல்லையா என்பது குறித்து ஆகஸ்ட் 19ல் முதலில் விசாரணை நடத்தப்படும் என அறிவித்த உச்சநீதிமன்றம், வழக்கின் விசாரணையை ஆகஸ்ட் 19ம் தேதிக்கு ஒத்திவைத்தது.

### வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்த விவகாரம்: நாடாளுமன்ற வளாகத்தில்

## ஒன்றிய அரசைக் கண்டித்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

### கொட்டும் மழையிலும் முழக்கமிட்டனர்!

*புதுடெல்லி, ஜூலை 30 -*

வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்த விவகாரத்தால் மாநிலங்களவை நேற்றும் முடங்கியது. அவை தொடங்கிய சிறிது நேரத்திலேயே பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

பீகாரில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தினமும் எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் அவையின் மையப்பகுதிக்கு வந்து முழக்கம் எழுப்புவதால் அமளி நிலவுகிறது.

இதனால் அவை ஒத்தி வைக்கப்பட்டது. அந்தவகையில், நேற்றைய தினமும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம், கத்தோலிக்க அருட் சகோதரிகள் மீதான தாக்குதல் உள்ளிட்டவை குறித்து விவாதம் நடத்த எதிர்க்கட்சிகள் நோட்டீஸ் அளித்தன. ஆனால் இதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இதனைக் கண்டித்து எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் முழக்கம் எழுப்பினர். இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக, அவை தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஒத்தி வைக்கப்பட்டது.